# ஆசிரியர் தேர்வு வாரியம்

## பத்திரிகைச் செய்தி

2025 ஆம் ஆண்டிற்கான முதுகலைப் பட்டதாரி ஆசிரியர் / உடற்கல்வி இயக்குநர் நிலை-1 / கணினி பயிற்றுநர் நிலை-1 காலிப் பணியிடங்களுக்கு 14 பாடத்திற்கான நேரடி நியமன அறிவிக்கை (Notification) எண்.02/2025 ஆசிரியர் தேர்வு வாரியத்தால் 10.07.2025 அன்று வெளியிடப்பட்டது. 12.10.2025 அன்று தேர்வுகள் நடத்தப்பட்டு, தேர்வு முடிவுகள் மற்றும் சான்றிதழ் சரிபார்ப்பிற்கான பட்டியல் பாடவாரியாக ஆசிரியர் தேர்வு வாரிய இணையதளத்தில் 27.11.2025 அன்று வெளியிடப்பட்டது. இதன்படி 05.12.2025, 06.12.2025, 08.12.2025 மற்றும் 09.12.2025 ஆகிய தேதிகளில் சான்றிதழ் சரிபார்ப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டது,

சான்றிதழ் சரிபார்ப்பின்போது பணிநாடுநர்கள் சமர்ப்பித்த சான்றிதழ்கள் மற்றும் ஆவணங்களின் அடிப்படையிலும், பணிநாடுநர்கள் தேர்வில் பெற்ற மதிப்பெண்கள், இடஒதுக்கீட்டு இனச்சுழற்சி முறை, அறிவிக்கை மற்றும் நடைமுறையிலுள்ள விதிகளை பின்பற்றியும் தற்காலிக தெரிவுப்பட்டியல் வெளியிடப்படுகிறது.

நாள். 22.01.2026

தலைவர்